**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், முதுகுளத்தூர்**

**முன்னிலை : திருமதி. G. தங்க கார்த்திகா, B.Sc., B.L.,**
**நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.), முதுகுளத்தூர்.**

**2026 ஆம் வருடம் மார்ச் மாதம் 12 ம் நாள் வியாழக்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.74/2025**

**CNR. NO.TNRM08-000671-2025**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | கீழத்தூவல் காவல்நிலையம்<br>குற்ற எண் - 44/2025 |
| | எதிரியின் விபரம் | |
| 2. | பெயர் | சிலம்பரசன் |
| 3. | த/பெ. | ராஜாங்கம் |
| 4. | தொழில் | விவசாயம் |
| 5. | முகவரி | செல்லூர்,<br>முதுகுளத்தூர் தாலுகா,<br>இராமநாதபுரம் மாவட்டம். |
| 6. | வயது | 28/2025 |
| 7. | சம்பவ நாள் | 02.04.2025 ம் தேதி 22.30 மணி |
| 8. | புகார் தேதி | 04.04.2025 ம் தேதி 09.00 மணி |
| 9. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | 04.04.2025 |
| 10. | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | 10.04.2025 |
| 11. | கமிட்டல் உத்தரவு | இல்லை |
| 12. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | 05.02.2026 |
| 13. | விசாரணை முடிவுற்ற நாள் | 12.03.2026 |
| 14. | சாட்டப்பட்ட குற்றச்சாட்டு | பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) BNS ன் கீழ் |
| | வனையப்பட்ட குற்றச்சாட்டு | பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS ன் கீழ் |
| 15. | காலதாமதத்திற்கான காரணம் | சாட்சிகள் உரிய காலத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை |

THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.03.12 16:24:43 +0530

<table>
<tr><td>16.</td><td>அரசு தரப்பு சாட்சிகள்</td><td>
<table>
<tr><th>சாட்சிகள்</th><th>முதல் விசாரணை</th><th>குறுக்கு விசாரணை</th></tr>
<tr><td>அ.சா.1</td><td>12.02.2026</td><td>12.02.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>26.02.2026</td><td>26.02.2026</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>26.02.2026</td><td>26.02.2026</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>26.02.2026</td><td>26.02.2026</td></tr>
</table>
</td></tr>
<tr><td>17.</td><td>எதிரியிடம் பிரிவு 351(1)(ஆ) BNSS ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>12.03.2026</td></tr>
<tr><td>18.</td><td>எதிரி தரப்பு சாட்சிகள்</td><td>இல்லை</td></tr>
<tr><td>19.</td><td>எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பிரிவு 359(ii) BNSS ன் படியான மனுக்கள்</td><td>U/s.359(ii) BNSS petition filed and dismissed in M.P. No.01/2026, dated: 12.02.2026</td></tr>
<tr><td>20.</td><td>எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பிரிவு 348 BNSS ன் படியான மனுக்கள்</td><td>U/s.348 BNSS Petition filed and allowed in MP. No.02/2026, dated: 26.02.2026</td></tr>
<tr><td>21.</td><td>அரசு தரப்பு வழக்கறிஞர்</td><td>திரு. S. சொக்கேசன்</td></tr>
<tr><td>22.</td><td>எதிரி தரப்பு வழக்கறிஞர்</td><td>திரு. M. அழகுமுத்து அரியப்பன்</td></tr>
<tr><td>23.</td><td>எதிரியின் கூற்று</td><td>எதிரி குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார்.</td></tr>
<tr><td>24.</td><td>தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள்</td><td>12.03.2026</td></tr>
<tr><td>25.</td><td>வழக்கின் முடிவு குறித்து எதிரிக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள்</td><td>12.03.2026</td></tr>
<tr><td>26.</td><td>நீதிபதியின் முடிவு</td><td>முடிவாக, எதிரியின் மீது பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை பிரிவு 271(1) B.N.S.S Act படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி சுதந்திரமாக விடுவிக்கப்படுகிறார். எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்யப்படுகிறது.</td></tr>
</table>



THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.03.12 16:24:49 +0530

| | | |
|---|---|---|
| | | இவ்வழக்கில் 08.04.2025 ம் தேதி, P.R.No.52/2025-ல் கண்ட வழக்குச் சொத்தான அ.சா.பொ.1 யை அழிக்க உத்தரவிடப்படுகிறது. மேல்முறையீடு இருப்பின் மேல்முறையீட்டு உத்தரவுப்படி செயல்படவும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. |

இந்த வழக்கு 28.05.2025 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு 12.03.2026 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M. அழகுமுத்து அரியப்பன், B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை உரிய கவனத்துடன் கேட்டும், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலித்தும் இன்று **(12.03.2026)** இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

<u>**தீர்ப்புரை**</u>

**அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையில் இருந்து வெளிப்படும் அரசு தரப்பு வழக்கு : -**

1) இவ்வழக்கின் நிகர்நிலைபுகார்தாரர் பூர்ணவள்ளியும், இவ்வழக்கின் எதிரியும் கணவன் மனைவி ஆவார்கள். புகார்தாரரின் அம்மாவான கமலா புகார்தாரரின் குடும்ப செலவிற்காக லோன் வாங்கி கொடுத்துள்ளார். இதனால் புகார்தாரரின் கணவரான எதிரி சிலம்பரசன் புகார்தாரரை சத்தம்போட்டு பிரச்சனை செய்து வந்துள்ளார். இந்நிலையில் கடந்த 02.04.2025 ம் தேதி இரவு 10 1/2 மணியளவில் புகார்தாரரும், அவரது அம்மாவும் வீட்டில் இருக்கும்போது அங்கு வந்த எதிரி புகார்தாரரை ரூம்குள் தள்ளி ரூமை அடைத்துக்கொண்டு ஏன்டி தேவிடியா மகளே யாரை கேட்டு லோன் வாங்கினா உங்க ஆத்தா என அசிங்கமாகப் பேசி கையால் புகார்தாரரின் கண்ணத்தில் மாறி மாறி அடித்து கீழே தள்ளிவிடவும், புகார்தாரர் வலி தாங்கமுடியாமல் ரூம் கதவை திறந்துகொண்டு வெளியே ஓடி வந்தபோது பின்னால் வந்த எதிரி புகார்தாரரை வீட்டிற்கு வெளியே மிதித்து தள்ளிவிட்டு அருகில் கிடந்த கம்பியை எடுத்து புகார்தாரரை


THANGA KARTHIKA Digitally signed by THANGA KARTHIKA Date: 2026.03.12 16:24:55 +0530

பார்த்து ஏன்டி தேவிடியா மகளே என்னை கேட்காம உன் ஆத்தா கொடுத்தா வாங்குவயாடீ என அசிங்கமாக பேசிக்கொண்டே கம்பியால் முதுகில் அடித்து சாதாரண காயத்தை ஏற்படுத்தியதாகவும், கீழே தள்ளிவிட்டு காலால் புகார்தாரரின் வயிற்றிலும், பிறப்புறுப்பிலும் மிதித்து சாதாரண காயத்தை ஏற்படுத்தியதாகவும், பின்பு புகார்தாரரை பார்த்து கம்பியை காண்பித்து ஆத்தாவும் மகளும் இப்படியே ஓடிடுங்க வீட்டிற்குள் வந்தா உங்களை கொல்லாமல் விடமாட்டேன்டீ என மிரட்டியதாக எதிரி மீது பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) BNS ன் கீழ் கீழத்தூவல் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் அரசு தரப்பு ஆவணங்களின் நகல்கள் அவருக்கு பிரிவு 230 B.N.S.S Act–ன் படி இலவசமாக வழங்கப்பட்டது.

3) எதிரிக்கு போதுமான கால அவகாசம் அளிக்கப்பட்ட பின்பு எதிரி மீது பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) BNS ன் கீழான குற்றம் பற்றி வினவிய போது எதிரி குற்றத்தை மறுத்தார். வழக்காவணங்களை பரிசீலித்தும் இரு தரப்பு வாதங்களை கேட்டும், முதல் நோக்கு வழக்கு இருந்த காரணத்தினால், எதிரியின் மீது பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS ன் கீழ் குறிப்பான குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கி வினவிய போதும் எதிரி அவர் மீதான குற்றச்சாட்டுக்களை மறுத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.4** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. **அ.சா.பொ.1** சான்று பொருள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றிய சாட்சியங்கள் குறித்து பிரிவு 351(1)(b) B.N.S.S Act ன் படி கேள்விகள் கேட்க எதிரி சாட்சியங்களை பொய் என்றும், தனது தரப்பில் சாட்சிகள் இல்லை என்று தெரிவித்ததன் பேரில் எதிரி தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டது.


THANGA KARTHIKA Digitally signed by THANGA KARTHIKA Date: 2026.03.12 16:24:59 +0530

**5) அரசு தரப்பு சாட்சியங்களின் சுருக்கம்**

i) அரசு தரப்பில் அசா.1 முதல் அசா.4 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களில் அசா.1 நிகர்நிலை புகார்தாரர் ஆவார். இவரது சாட்சியத்தில் சென்ற வருடம் ஒரு நாள் தனது வீட்டில் இருந்தபோது வீட்டிற்கு வெளியே கூட்டமாக சில நபர்கள் சண்டையிட்டுக்கொண்டிருந்ததை சென்று பார்த்தபோது கீழே விழுந்து காயம் ஏற்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி, அசா.1 அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார்.

ii) அசா.2 மற்றும் அசா.3 சாட்சிகள் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக சாட்சிப்பட்டியலில் சேர்க்கப்பட்டவர்கள் ஆவார்கள். இவர்களது சாட்சியத்தில் வழக்கு சம்பவத்தை பார்க்கவில்லை என்று கூறி பிறழ்சாட்சியாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

iii) அசா.4 கீழத்தூவல் காவல்நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் ஆவார். இவரது சாட்சியத்தில் புலன்விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் திரு.முருகன் அவர்களுடன் பணியாற்றியுள்ளதால் ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாக கூறி மேற்படி புலன்விசாரணைஅதிகாரி அசா.1 கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று முதல்தகவல் அறிக்கை பதிவு செய்து சம்பவ இடம் சென்று பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தும், அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்திலிருந்து எதிரி குற்றச்சம்பவத்தில் பயன்படுத்திய இரும்பு கம்பி ஒன்றை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியும், சம்பவ இட சாட்சிகளை விசாரித்து மருத்துவ சாட்சியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி, வழக்கு சொத்தை படிவம்–91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்து PR No.52/2025 பெற்றும், வழக்கின் புலன்விசாரணையை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

**6) தீர்வுக்குரிய பிரச்சனை :–**

i. எதிரியின் மீது பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபித்துள்ளதா?


THANGA KARTHIKA Digitally signed by THANGA KARTHIKA Date: 2026.03.12 16:25:05 +0530

ii. அவ்வாறு குற்றம் நிரூபிக்கப்பட்டிருப்பின் எதிரிக்கு கிடைக்ககூடிய தண்டனை விவரம் என்ன? என்பதே இவ்வழக்கின் தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

iii. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**7) அரசு தரப்பு வழக்கினை எதிரிக்கு எதிராக நிரூபித்துள்ளதா? என்பதை முடிவு செய்ய அரசு தரப்பு சாட்சியங்களை ஆராயும் போது:–**

i. அசா.1 மற்றும் இவ்வழக்கின் எதிரி கணவன் மனைவி ஆவார்கள். அசா.1 நிகர்நிலைபுகார்தாரர் ஆவார். அசா.1 சாட்சி பாதிக்கப்பட்ட நபராக சாட்சியப்பட்டியலில் சேர்க்கப்பட்டவர் ஆவார். அசா.1 தனது சாட்சியத்தில் சென்ற வருடம் ஒரு நாள் இரவு 10.00 மணியளவில் தனது வீட்டில் இருந்தபோது வீட்டிற்கு வெளியே கூட்டமாக 10, 15 நபர்கள் சண்டையிட்டுக்கொண்டிருந்ததாகவும், என்னவென்று அசா.1 சென்று பார்த்தபோது கூட்டநெரிசலில் கீழே விழுந்து காயம் ஏற்பட்டதாகவும், அதனால் பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தபோது போலிசார் வந்து வெள்ளைத்தாளில் கையொப்பம் (**அ.சா.ஆ.1)** பெற்றுக்கொண்டதாகவும், போலிசார் விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

ii. மேலும், சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளாக அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட அசா.2 மற்றும் அசா.3 ஆகியோர்கள் வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது என்றும், வழக்கு சம்பவத்தை பார்க்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்கள். எனவே, மேற்படி மூவரும் பிறழ்சாட்சிகளாக அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அவ்வாறு குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோதிலும் அவர்களின் சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும், புகார் வாக்குமூலமானது நம்பத்தகுந்த ஆவணம் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.


THANGA KARTHIKA Digitally signed by THANGA KARTHIKA Date: 2026.03.12 16:25:12 +0530

iii. மேலும், எதிரியுடன் அ.சா.1 ராசியாகிவிட்டதாகச் சொல்லி எதிரி தரப்பில் பிரிவு 359(ii) BNSS ன் கீழ் சமரச மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால், எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சமரசம் செய்துகொள்ள முடியாத குற்றம் என்பதால் எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சமரச மனுவானது இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

iv. அசா.4 கீழத்தூவல் காவல்நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் ஆவார். இவரது சாட்சியத்தில் புலன்விசாரணை அதிகாரியான திரு.முருகன் என்பவரின் கையொப்பம் பரிட்சயம் என்று கூறி அவர் பணிஓய்வு பெற்றுவிட்டதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 04.04.2025 ம் தேதி காலை 07.00 மணியளவில் சார்பு ஆய்வாளர் திரு.முருகன் காவல் நிலையப் பொறுப்பில் இருந்தபோது பரமக்குடி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப்பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அசா.1 கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று காலை 09.00 மணிக்கு நிலையம் வந்து புகார் வாக்குமூலத்தின் **(அசா.ஆ.2)** தன்மைக்கு ஏற்ப நிலையக் குற்ற எண்.44/2025 பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) BNS கீழ் முதல் தகவல் அறிக்கை **(அ.சா.ஆ.3)** பதிவு செய்து அன்றைய தினமே 10.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் குமார் மற்றும் ரமேஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் **(அ.சா.ஆ.5)** வரைந்து பார்வை மகஜர் **(அ.சா.ஆ.4)** தயார் செய்து அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்திலிருந்து எதிரி குற்றச்சம்பவத்தில் பயன்படுத்திய சுமார் 66.5 செ.மீ. அளவுள்ள இரும்பு கம்பி **(அசா.பொ.1)** ஒன்றை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி அதில் சாட்சிகளிடம் கையொப்பம் **(அசா.ஆ.6)** பெற்றதாக சாட்சியம் அளித்துள்ளார்.

v. மேலும், அன்றைய தினமே சம்பவயிட சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து வழக்கு சம்பவம் உண்மை என தெரிய வந்ததாலும் எதிரி குற்ற சம்பவத்தில் ஈடுபட்டது உண்மை என தெரியவந்ததாலும் எதிரியை தேடிவந்த நிலையில் அன்றைய தினமே 16.00

 THANGA KARTHIKA Digitally signed by THANGA KARTHIKA Date: 2026.03.12 16:25:20 +0530 

மணிக்கு செல்லூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைபள்ளி அருகே நின்று கொண்டிருந்த எதிரியை ரகசிய தகவலாளி அடையாளம் காட்ட அவரை கைதுக்கான காரணம் கூறி நிலையம் அழைத்து வந்து முறைப்படி திரேக பரிசோதனை செய்து பாராகாவல் வசம் ஒப்படைத்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தும், வழக்கு சொத்தை படிவம்-91 **(அசா.ஆ.7)** மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்து PR No.52/2025 பெற்றும், இவ்வழக்கில் காயம்பட்ட அசா.1 க்கு சிகிச்சை அளித்த பரமக்குடி அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.ஜெகநாதன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மேற்படி மருத்துவர் அவர்கள் வாதிக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் **(அசா.ஆ.8)** என சான்று வழங்கியதை பெற்று அத்துடன் வழக்கின் புலன் விசாரணையை கடந்த 16.04.2025 ம் தேதி முடித்து எதிரி மீது பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) BNS கீழ் இறுதி அறிக்கையை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி, சிறப்பு சார்பு ஆய்வாளர் இவ்வாறு சாட்சியம் அளித்துள்ளபோதிலும் இவரது சாட்சியத்திற்கு வலுசேர்க்கும் விதமாக வேறு எந்த சாட்சிகளும் அரசு தரப்பில் சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, இவரது சாட்சியத்தை மட்டும் வைத்து வழக்கை முடிவு செய்ய இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

vi. மேற்படி, அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை பரிசீலிக்கையில் அசா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை என்பதாலும், வழக்கு புகார் வாக்குமூலம் நம்பத்தகுந்த ஆவணம் இல்லை என்று நீதிமன்றம் முடிவு செய்துள்ளதாலும், அ.சா.1 ம், எதிரியும் கணவன் மனைவி என்பதால் சமாதானமாகி விட்டதாக பிரிவு 359(ii) BNSS-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து மேற்படி சாட்சியங்களின் ஆய்விலிருந்து எதிரியின் மீது பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி


THANGA KARTHIKA Digitally signed by THANGA KARTHIKA Date: 2026.03.12 16:25:25 +0530

நிரூபிக்கப்படவில்லை என்று தீர்வுக்குரிய பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் பதில் அளிக்கிறது.

vii. இறுதியாக, இந்நீதிமன்றம், எதிரியின் மீது பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து, மேற்படி எதிரியை பிரிவு 271(1) B.N.S.S Act ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி சுதந்திரமாக விடுவிக்கப்படுகிறார். எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்யப்படுகிறது.

viii. இவ்வழக்கில் 08.04.2025 ம் தேதி, P.R.No.52/2025–ல் கண்ட வழக்குச் சொத்தான அ.சா.பொ.1 யை அழிக்க உத்தரவிடப்படுகிறது. மேல்முறையீடு இருப்பின் மேல்முறையீட்டு உத்தரவுப்படி செயல்படவும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் என்னால் கையொப்பமிடப்பட்டு நீதிமன்ற முத்திரை வைக்கப்பட்டு 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 12 ம் நாள் வியாழக்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.03.12 16:25:33 +0530

நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),
முதுகுளத்தூர்.

**<u>அரசு தரப்பு சாட்சிகள்:–</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | திருமதி.பூர்ணவள்ளி (புகார்தாரர்) |
| அ.சா.2 | திருமதி.கமலா |
| அ.சா.3 | திரு.ராஜாங்கம் |
| அ.சா.4 | திரு.கோட்டைச்சாமி (சிறப்பு சார்பு ஆய்வாளர்) |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 04.04.2025 | புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் மட்டும் |
| அ.சா.ஆ.2 | 04.04.2025 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.3 | 04.04.2025 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 04.04.2025 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.5 | 04.04.2025 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | 04.04.2025 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.7 | 04.04.2025 | படிவம்–91 |
| அ.சா.ஆ.8 | 03.04.2025 | அசா.1 க்கு பரமக்குடி அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட காயச்சான்றுடன் கூடிய விபத்து பதிவேடு |

**<u>அரசு தரப்பு சான்றுபொருள்:–</u>**

1) அ.சா.பொ.1 – சுமார் 66.5 செ.மீ. அளவுள்ள இரும்பு கம்பி ஒன்று

**<u>எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள்:–</u>** இல்லை

**<u>குறிப்பு :–</u>**

1. எதிரி வழக்கு விசாரணையின்போது பிணையில் இருந்தார்.

2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்கப்படவில்லை.

3. தீர்ப்பு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.03.12 16:25:39 +0530

நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),

முதுகுளத்தூர்.